# மாலைக்கதிர்

Maalaikkathir

சாயல் - 03 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஐப்பசி 07 வெள்ளிக்கிழமை | 24.10.2025 | கதிர் 349



யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு -

Yarl Muttram

Youtube Channel








## பருத்தித்துறை மரக்கறிச் சந்தையை பழைய இடத்துக்கு மாற்றக் கோரி வர்த்தகர்கள் சிலர் போராட்டம்!

### புதிய இடத்தில் வழமை போல் இயங்கிய சந்தை

வடமராட்சி, ஒக். 24

பருத்தித்துறை, முதலாம் குறுக்குத் தெருவில் அமைந்துள்ள புதிய மரக்கறி சந்தையை முன்னர் இருந்த நவீன சந்தை கட்டடத் தொகுதிக்கு இடமாற்றுமாறு கோரி பருத்தித்துறை வர்த்தக சங்கத்தினர் இன்று வெள்ளிக்கிழமை கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

7➤

# என் உயிருக்கு அச்சுறுத்தலா?

### நாடாளுமன்றத்தில் கவலை வெளியிட்ட ஜகத் விதான எம்.பி.

கொழும்பு, ஒக். 24

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜகத் விதான இன்று நாடாளுமன்றத்தில் கொலைத் திட்டங்கள் மற்றும் தனது உயிருக்கு அச்சுறுத்தல்கள் இருப்பதாகக் கூறப்படுவது குறித்து கவலை தெரிவித்தார்.

இன்று நாடாளுமன்றத்தில் உரையாற்றிய அவர், இந்த விவகாரம் குறித்து விசாரணை நடத்துமாறு களுத்துறை பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கு, பொலிஸ்மா அதிபர் அறிவித்துள்ளார் என்றும் குறிப்பிட்டார்.

"வாகனத்தில் இருந்து இறங்கும்போது என்னைப் படுகொலை செய்யத் திட்டமிட்டுள்ளதாகக் கடிதம் மூலம் பிரதிப் பொலிஸ்மா அதிபருக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபரின் பெயரும் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. நான் சுட்டுக் கொல்லப்படுவேன் என்று அதில் கூறப்பட்டுள்ளது." - என்றும் அவர் கூறினார்.



7➤

## பருத்தித்துறை மரக்கறிச் சந்தையை பார்வையிட்ட இளங்குமரன் எம்.பி.

### வியாபாரிகளுடன் கலந்தாலோசனை

வடமராட்சி, ஒக். 24

பருத்தித்துறை மரக்கறி வியாபாரிகள், வர்த்தக சங்கத்தினர் ஆகியோர் மரக்கறிச் சந்தையை நவீன சந்தைத் தொகுதியில் இடமாற்றம் செய்து தருமாறு கோரி இன்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். இந்நிலையில், குறித்த சந்தைப் பகுதிக்கு இன்று விஜயம் மேற்கொண்ட

7➤



## சில மாவட்டங்களுக்குத் தொடரும் மண்சரிவு அபாய எச்சரிக்கை!

கொழும்பு, ஒக். 24

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலையால் சில மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்டுள்ள மண்சரிவு அபாய எச்சரிக்கை தொடர்ந்தும் அமுலில் இருக்கும் என்று தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

அதன்படி, கொழும்பு, களுத்துறை, காலி, கண்டி, கேகாலை, குருநாகல், மாத்தளை, நுவரெலியா, மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்டுள்ள மண்சரிவு அபாய எச்சரிக்கை, தொடர்ந்தும் நீடிக்கப்பட்டுள்ளது என்று தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.



## கொக்குவில் இந்துக் கல்லூரி படுகொலை நினைவேந்தல்



யாழ்ப்பாணம், ஒக். 24

யாழ்ப்பாணம் - கொக்குவில் இந்துக் கல்லூரி வளாகத்தில் இந்திய ஆக்கிரமிப்புப் படையினரால் படுகொலை செய்யப்பட்ட 50 மக்களின் 38 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு இன்று கல்லூரியின் வெளி வாசலில் நடைபெற்றது.

1987 ஆம் ஆண்டு கொக்குவில் இந்துக் கல்லூரியில் மக்கள் தஞ்சம் அடைந்திருந்தபோது அவர்கள் மீது இந்திய ஆக்கிரமிப்புப் படையினர் கொடூர தாக்குதலை நடத்தியிருந்தனர். இதில் 50 அப்பாவி மக்கள் பலியாகியிருந்தனர். பலர் படுகாயமடைந்திருந்தனர்.

இன்றைய நினைவேந்தல்

7➤


- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -



## 30 ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக்குழுவினர்களின் சொத்துக்கள் தொடர்பில் விசாரணை

கொழும்பு, ஒக் .24

பாதாள குழுத் தலைவரான கெஹல்பத்தர பத்மே உள்ளிட்ட சுமார் 30 ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக்குழுவினர்களின் சொத்துக்கள் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

காவல்துறையின் சட்டவிரோத சொத்துக்கள் புலனாய்வு பிரிவு இது தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்துள்ளது.

ஏற்கனவே, பத்மேவுடன் தொடர்புடைய சொத்துக்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

அவற்றில், கம்பஹா – கெஹல்பத்த பகுதியிலுள்ள சுமார் 50 மில்லியன் ரூபாய் பெறுமதியான 28 பேர்ச் காணியும் உள்ளடங்குவதாக விசாரணையாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

குறித்த காணி அண்மையில் சட்டரீதியாக முடக்கப்பட்டது.

இதேவேளை, லொகு பெட்டி என்றழைக்கப்படும் மற்றுமொரு பாதாள உலக குழு உறுப்பினரின் சட்டவிரோத சொத்துக்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஐ)

# 24 மணித்தியாலங்களுக்கு விடுக்கப்பட்டுள்ள எச்சரிக்கை

கொழும்பு, ஒக் .24

வளிமண்டலவியல் திணைக்களம் பலத்த காற்று, கனமழை மற்றும் கொந்தளிப்பான கடல் நிலை குறித்து எச்சரிக்கை விடுத்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

இந்த அறிக்கையின்படி, வங்காள விரிகுடா கடற்பகுதியில் பயணிக்கும் பலநாள் மீன்பிடி படகுகள் அவதானமாக இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளன.

இன்று (24) காலை 10 மணிக்கு வெளியிடப்பட்ட இந்த அறிவிப்பு, அடுத்த 24 மணி நேரத்திற்கு செல்லுபடியாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, காங்கேசன்துறையிலிருந்து திருகோணமலை வழியாக மட்டக்களப்பு வரையான கரையோரத்திற்கு அப்பாலுள்ள ஆழமற்ற கடற்பகுதிகளில் மீன்பிடி மற்றும் கடற்படை நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் அவதானமாக இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.


இன்று (24) காலை 5:30 மணியளவில், தென்கிழக்கு வங்காள விரிகுடா கடற்பகுதியில் குறைந்த அழுத்தப்பகுதி உருவாகியுள்ளது.

இந்த அமைப்பு அடுத்த 24 மணி நேரத்தில் மேலும் வலுப்பெற்று, மேற்கு–வடமேற்கு திசையை நோக்கி நகரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதன்படி, மறு அறிவித்தல் வரும் வரை, அட்சரேகை 5 முதல் 18 வரையும், கிழக்கு தீர்க்கரேகை 80 முதல் 95 வரையும் உள்ள கடற்பகுதிகளில் மீன்பிடி மற்றும் கடற்படை நடவடிக்கைகளைத் தவிர்க்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தற்போது அப்பகுதிகளில் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப்பவர்கள், ஒக்டோபர் 25-க்கு முன் அந்தக் கடற்பகுதிகளிலிருந்து வெளியேறுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

குறிப்பிடப்பட்ட கடற்பகுதிகளில் இடியுடன் கூடிய கனமழை பெய்யக்கூடும். மேலும், காற்றின் வேகம் மணிக்கு 55–65 கிலோமீற்றர் வரை அதிகரிக்கும்போது, அந்தக் கடற்பகுதிகள் அவ்வப்போது கொந்தளிப்பாகவோ அல்லது மிகவும் கொந்தளிப்பாகவோ மாறக்கூடும் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)






# கட்டுநாயக்க விமான நிலைய பாதுகாப்பை தீவிரப்படுத்த உயர் மட்ட கலந்துரையாடல்



கொழும்பு, ஒக் .24

கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்பான உயர் மட்ட மீளாய்வுக் கூட்டம் ஒன்று நேற்று நடைபெற்றது.

துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் பிரதி அமைச்சர் ஜனித் ருவன் கொடித்துவக்கு மற்றும்பாதுகாப்புச் செயலாளர் எயார் வைஸ் மார்ஷல் சம்பத் துய்யகொந்த ஆகியோரின் தலைமையில் இக்கூட்டம் இடம்பெற்றது.

சர வதேசத திற கு இலங்கையைத் திறந்துவிடும் பிரதான வான்வழியாகத்திகழும் பண்டாரநாயக்கசர்வதேசவிமான நிலையத்தின் ஒட்டுமொத்த பாதுகாப்பை வலுப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து இங்கு கலந்துரையாடப்பட்டது.

இதன்போது கருத்துத் தெரிவித்த பாதுகாப்புச் செயலாளர், தேசிய பாதுகாப்பு, பொருளாதார வளர்ச்சி மற்றும் சர்வதேச உறவுகளில் விமான நிலையத்தின் முக்கிய பங்கினைக் குறிப்பிட்டு, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் உயர் மட்ட பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பேணுவதன் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தினார்.

பயணிகள், விமானப் பணியாளர்கள், விமான நிலைய ஊழியர்கள் மற்றும் விமான நிலையச் செயற்பாடுகளுடன் தொடர்புடைய ஏனைய அனைத்து நபர்களின் பாதுகாப்பு மற்றும் நலனை உறுதி செய்வதன் முக்கியத்துவத்தையும் அவர் அங்கு சுட்டிக்காட்டினார்.

அத்துடன், விமான நிலையத்தின் செயற்பாடுகளைப் பேணுவதற்காக அனைத்துத் தரப்பினரதும் அர்ப்பணிப்பை அவர் பாராட்டியதுடன், விமான நிலையத்தில் உயர் மட்ட பாதுகாப்பு மற்றும் பாதுகாப்புத் தரங்களைப் பேணுவதற்கு தொடர்ச்சியான ஒருங்கிணைப்பின் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

சட்டவிரோதச் செயற்பாடுகளைத் தடுத்தல், நிறுவனங்களுக்கு இடையிலான ஒருங்கிணைப்பை மேம்படுத்துதல் மற்றும் சாத்தியமான அச்சுறுத்தல்களுக்கு தற்போதுள்ள பதில் பொறிமுறைகளை மேம்படுத்துதல் குறித்தும் இந்தக் கலந்துரையாடலில் கவனம் செலுத்தப்பட்டது. (ஐ)

# 2026 முதல் புதிய கல்வி சீர்திருத்தம் அறிமுகம்! பாடசாலை நேரத்தில் ஏற்படவுள்ள மாற்றம்



கொழும்பு, ஒக் .24

அடுத்த ஆண்டு முதல்நடைமுறைப்படுத்தப்படவுள்ள தரம் 1 மற்றும் தரம் 6 பாடத்திட்டச் சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதற்கான வழிகாட்டல் தொகுப்பு கல்வி அமைச்சால் வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி, புதிய கல்விச் சீர்திருத்தங்கள் தொடர்பான சுற்றறிக்கைகள் மற்றும் வழிகாட்டல்கள் எதிர்காலத்தில் வெளியிடப்படவுள்ளன.

அடுத்த ஆண்டு முதல்நடைமுறைப்படுத்தப்படவுள்ள தரம் 1 மற்றும் தரம் 6 பாடத்திட்டச் சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதற்கான வழிகாட்டல்தொகுப்பை கல்வி அமைச்சு நேற்று வெளியிட்டது.

புதிய சீர்திருத்தங்களின் கீழ் ஆரம்பக் கல்வி மூன்று கட்டங்களாக நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

அதாவது, தரம் 1, 2 முதலாம் பிரதான கட்டம், தரம் 3, 4 இரண்டாம் பிரதான கட்டம் மற்றும் தரம் 5 மூன்றாம் பிரதான கட்டம் என பிரிக்கப்பட்டுள்ளது.

தரம் 1 முதல் 5 வரையான பாடத்திட்டம் தாய்மொழி, ஆங்கில மொழி, இரண்டாம் தேசிய மொழி, கணிதம், சமயமும் விழுமியக் கல்வியும், ஆரம்ப விஞ்ஞானம் மற்றும் சூழல் சார்ந்த நடவடிக்கைகள், ஒருங்கிணைந்த அழகியற் கல்வி, சுகாதாரமும் உடற் கல்வியும் மற்றும் பாட இணைச் செயற்பாடுகள் ஆகிய 9 பொது கற்றல் துறைகளின் கீழ் வடிவமைக்கப்பட்டுள்ளது.

ஆரம்பப் பிரிவில் தரம் 1, 2, 3 மற்றும் 4 இற்கான பாடசாலை நேரங்களில் எந்த மாற்றமும் இல்லை. ஆனால், தரம் 5 இற்கான பாடசாலை நேரம் மு.ப. 7.30 முதல் பி.ப. 2.00 வரை இருக்கும்.

தரம் 1 மாணவர்களுக்குப் பாடப்புத்தகங்களுக்குப் பதிலாக, புதிய பாடத்திட்டத்திற்கு அமைவாக தேசிய கல்வி நிறுவனத்தால் தொகுக்கப்பட்ட செயற்பாட்டு புத்தகங்கள் **(Activity Books)** வழங்கப்படத் திட்டமிடப்பட்டுள்ளது.

இளையோர் இடைநிலைக் கல்வி தரம் 6 முதல் 9 வரை நடைமுறைப்படுத்தப்படுவதுடன், அடுத்த ஆண்டு முதல் தரம் 6 இற்காகப் புதிய பாடத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் வழிகாட்டல் தொகுப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இத்தரங்களில் உள்ள அனைத்து மாணவர்களும் 14 கட்டாயப் பாடங்களைக் கற்க வேண்டும். அத்துடன், விளையாட்டுக்கள் மற்றும் சங்கங்களில் பங்கேற்கவும் ஒவ்வொரு குழந்தைக்கும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

14 கட்டாயப் பாடங்களும் மட்டுக்கள் **(Modules)** மூலம் கற்பிக்கப்பட எதிர்பார்க்கப்படுகிறது. பாடங்களுக்கு ஏற்ப, ஒரு தவணையில் கற்க வேண்டிய மட்டுக்களின் எண்ணிக்கை தீர்மானிக்கப்படும்.


தரம் 6 முதல் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம், வாழ்க்கைக்கான தொழில்நுட்பம் மற்றும் தொழில்முனைவு மற்றும் நிதிசார் கல்வியறிவு ஆகிய மூன்று புதிய பாடங்கள் அறிமுகப்படுத்தப்படவுள்ளன.

இதேவேளை, 2027 ஆம் ஆண்டு முதல் முன்பள்ளிகளுக்காக ஒரே பாடத்திட்டக் கட்டமைப்பு அறிமுகப்படுத்தப்படும் என்று கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர், பிரதமர் கலாநிதி ஹரினி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

ஆரம்பகால குழந்தைப் பருவத்திற்கான பாடத்திட்டக் கட்டமைப்பு தற்போது பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன், சுமார் 19,000 முன்பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சியாளர்களின் பயிற்சித் திட்டம் நவம்பர் மாதம் 25 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

இதன்போது, எந்தவொரு பாடசாலையும் மூடப்படாது என்றும், பாடசாலைகளை ஒன்றிணைத்து அபிவிருத்தி செய்வதே அரசாங்கத்தின் கொள்கை என்றும் பிரதமர் மேலும் தெரிவித்தார். (ஐ)

# பதிவு செய்யப்பட்ட குற்றவாளிகளுக்கு பாதுகாப்பு வழங்க முடியாது! பாதுகாப்பு அமைச்சர் விளக்கம்



கொழும்பு, ஒக் .24

கொலை செய்யப்பட்ட வெலிகம பிரதேச சபையின்தலைவர்லசந்த விக்கிரமசேகர பதிவு செய்யப்பட்ட குற்றவாளி, ஆகவே பதிவுசெய்யப்பட்ட குற்றவாளியொருவருக்கு பாதுகாப்பு வழங்கும் இயலுமை பொலிஸ் திணைக்களத்துக்கு கிடையாது என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் உரையாற்றிய ஐக்கிய மக்கள் சக்தியின் மாத்தறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சதுர கலபதி ' கொலை செய்யப்பட்ட வெலிகம பிரதேச சபையின் தலைவர் லசந்த விக்கிரமசேகர பொலிஸ்மா அதிபரிடம் பாதுகாப்பு கோரியுள்ளார். இருப்பினும் அவருக்கு பாதுகாப்பு வழங்கப்படவில்லை' என்று குறிப்பிட்டார். இதனை சுட்டிக்காட்டி உரையாற்றுகையில் அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றியதாவது,

கொலை செய்யப்பட்ட வெலிகம பிரதேச சபையின் தலைவர் லசந்த விக்கிரமசேகர பொலிஸ் ஆவணப்படுத்தலுக்கமைய பதிவு செய்யப்பட்ட குற்றவாளி, சட்டத்தின் பிரகாரம் பாதிக்கப்பட்டோருக்கும், சாட்சியாளர்களுக்கும் பிரத்தியேக பாதுகாப்பு வழங்கப்படும்.

பொலிஸ் ஆவணப்படுத்தலில் பதிவு செய்யப்பட்ட குற்றவாளியாக பெயரிடப்பட்டுள்ள ஒருவருக்கு பாதுகாப்பு வழங்கும் இயலுமை பொலிஸ் திணைக்களத்துக்கு கிடையாது.

இந்நிலையில் 2025 ஆம் ஆண்டில் மட்டும் சுமார் 1947 ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொதுப் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

போதைப்பொருள் மற்றும் பாதாள உலக வலையமைப்புகளின் முக்கிய பகுதியாக ஆயுதங்கள் இருப்பதாக, அமைச்சர் தெரிவித்துள்ளார்.

மேலும் சில பாதாள உலகக் கும்பல்கள் இன்னும் ஆயுதங்களை வைத்திருப்பதால், நாடு முழுவதும் துப்பாக்கிச் சூடு சம்பவங்கள் பதிவாகி வருவதாகவும் அவர் இதன் போது தெரிவித்துள்ளார்.

முன்னர் ஒரு இராணுவ முகாமில் இருந்து 78, வு-56 துப்பாக்கிகள் பாதாள உலகக் கும்பல்களுக்கு வழங்கப்பட்டதாகவும், அவற்றில் 36 துப்பாக்கிகள் ஏற்கனவே அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (ஐ)

# இஷாரா செவ்வந்தி தப்பிச் சென்ற படகு மீட்பு

*கொழும்பு, ஒக் .24*

*கணேமுல்ல சஞ்சீவ கொலையுடன் தொடர்புடைய முக்கிய சந்தேகநபரான இஷாரா செவ்வந்தி, இந்தியாவிற்கு தப்பிச்செல்ல உதவிய குற்றச்சாட்டில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஆனந்தன் என்பவர் கைது செய்யப்பட்டார்.*

*தற்போது மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளை அடுத்து ஆனந்தனின் மாமா நேற்று கைது செய்யப்பட்டுள்ளார். தொடரும் விசாரணைகளில் இன்னும் சிலர் யாழ்ப்பாணத்தில் கைதாகும் சந்தர்ப்பம் உள்ளதாக தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன. இதேவேளை இஷாரா செவ்வந்தியை இந்தியாவிற்கு கொண்டு சேர்ப்பித்த படகு யாழ்ப்பாணம்–அராலி பகுதியில் கைப்பற்றப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.*

*கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினரால் கைப்பற்றப்பட்ட குறித்த படகு, யாழ்ப்பாணம் தலைமையக பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.*

*இவ்வாறு கைப்பற்றப்பட்ட படகின் இயந்திரத்தை காணவில்லை என்றும், குறித்த படகை ஓட்டிச்சென்ற இரு இளைஞர்கள் தலைமறைவாகியுள்ளதாகவும் அவர்கள் தொடர்பில் காவல்துறையினர் தீவிர விசாரணையில் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. அத்துடன், இஷாரா கிளிநொச்சியில் தலைமறைவாகியிருக்க, உதவியமை தொடர்பில் கைது செய்யப்பட்ட ஒருவர் இன்றுவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.*

*கொழும்பு புதுக்கடை நீதவான் முன்னிலையில் அவர் பிரசன்னப்படுத்தப்பட்ட போது, விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.*

*இதேவேளை, இஷாரா செவ்வந்தியின் தொலைபேசி அழைப்புகள் தொடர்பில் விரிவான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருதாக, கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினர் குறிப்பிட்டுள்ளனர். (ஐ)*

# வடகிழக்கு பருவமழை சென்னை மாநகராட்சி சார்பில் 2 நாட்களில் 4.04 லட்சம் பேருக்கு உணவு!

வடகிழக்கு பருவமழை தொடர்ந்து பெய்துவரும் நிலையில், தாழ்வான பகுதிகளில் உள்ள பொதுமக்களுக்கு காலை, மதியம், இரவு என மூன்று வேளைகளிலும் மொத்தம் 4 இலட்சத்து 400 பேருக்கு உணவு வழங்கப்பட்டுள்ளது.



இது குறித்து அரசு வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், "தமிழ்நாட்டில் தற்போது தொடங்கியுள்ள வடகிழக்கு பருவமழை காலத்தில் தமிழ்நாடு முழுவதிலும் பரவலாக மழை பெய்து வருகிறது. இந்த பருவமழை காரணமாக மக்கள் வாழும் பள்ளமான பகுதிகளில் தேங்கும் மழைநீரால் பொதுமக்கள் பாதிக்கப்படக்கூடாது என்பதற்காக முதல்வர் மு.க.ஸ்டாலின் நேரடியாகவும் காணொலி காட்சி வாயிலாகவும் அரசின் உயர் அதிகாரிகள் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள், காவல் துறை அதிகாரிகள் ஆகியோருடன் ஆய்வுக் கூட்டங்களை நடத்தி தேவையான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தி வருகிறார்.

முதல்வர் மு.க.ஸ்டாலினும், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினும், அமைச்சர் பெருமக்களும் மழைநீர் சூழும் பகுதிகளைப் பார்வையிட்டு அதிகாரிகளுக்கு அறிவுரைகள் வழங்கி வருகிறார்கள். இந்த பருவமழைக் காலத்தில் 17.10.2025 அன்று காலை 8.30 மணிமுதல் 24.10.2025 காலை 8 மணிவரை சராசரியாக 179.80 மி.மீ. மழை பெய்துள்ளது. 23.10.2025 காலை 8.30 மணிமுதல் இன்று காலை 8 மணிவரை சராசரியாக 17.94 மி.மீ. மழை பெய்துள்ளது. அதிகபட்சமாக மேடவாக்கத்தில் 93.30 மி.மீ. மழை பெய்துள்ளது.

மழைநீர் சூழ்ந்து பாதிக்கப்படும் பகுதிகளில் உள்ள மக்களுக்கு தேவையான உதவிகளை அளித்திடும் நோக்கில் வெள்ள நிவாரண முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன.

சென்னை மாநகரைப் பொறுத்தவரை பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் 215 இடங்களில் நிவாரண மையங்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. இந்த மையங்களில் உணவு சுகாதார வசதி, குடிநீர் வசதி முதலியவை செய்யப்பட்டுள்ளன.

நிவாரண மையங்களுக்கு உணவு வழங்க ஏதுவாக 106 மைய சமையல் கூடங்கள் அமைக்கப்பட்டு தயார்நிலையில் உள்ளன. தாழ்வான பகுதிகளில் உள்ள பொதுமக்களுக்கு 22.10.2025 முதல் 23.10.2025 வரை 1,48,450 பேருக்கு காலை உணவும், 2,23,950 பேருக்கு மதிய உணவும் 28,000 பேருக்கு இரவு உணவும் என மொத்தம் 4 லட்சத்து 400 பேருக்கு உணவு வழங்கப்பட்டுள்ளது.

மழைநீர் தேங்கும் இடங்களில் மழைநீரை வெளியேற்றும் வகையில் பல்வேறு திறன் கொண்ட 1,436 மோட்டார் பம்புகள் தயார் நிலையில் உள்ளன. 150 எண்ணிக்கையில் 100ஹி மோட்டார் பம்புகள் தயார் நிலையில் உள்ளன. டிராக்டர் மேல் 500 மோட்டார் பம்புகள் பொருத்தப்பட்டு தயார் நிலையில் உள்ளன. இதன் மூலம் மழைநீர் தேங்கும் இடங்களில் மழைநீர் அகற்றும் பணிகள் நடைபெற்று வருகிறது.

2 ஆம்பிபியன், 3 ஆம்பிபியன் எஸ்கவேட்டர்கள், பல்வகை பயன்பாட்டிற்கான 6 ரோபோடிக் எஸ்கவேட்டர்கள், 3 மினிஆம்பிபியன், 7 சூப்பர் சக்கர் வாகனங்கள், 15 மரக்கிளை அகற்றும் சக்திமான் வாகனங்கள், உட்பட மொத்தம் 478 வாகனங்கள் மற்றும் இயந்திரங்களும் தயார் நிலையில் உள்ளன.

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் விழும் மரங்களை அகற்றுவதற்காக 15 ஹைட்ராலிக் மர அறுவை இயந்திர வாகனங்கள், 2 ஹைட்ராலிக் ஏணி, 224 கையடக்க மர அறுவை அறுப்பான், 216 டெலஸ்கோபிக் மர அறுவை இயந்திரங்கள் என மொத்தம் 457 மர அறுவை இயந்திரங்களும் தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

17.10.2025 முதல் 22.10.2025 வரை மழையின் காரணமாக விழுந்த 31 மரங்களும் அகற்றப்பட்டுள்ளன. பெருநகர சென்னை மாநகராட்சி தொடர்பான புகார்களை 1913 என்ற எண்ணிற்கும், சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்றல் தொடர்பான புகார்களை 1916 என்ற உதவி எண்ணிற்கும் 24 மணி நேரமும் கட்டணமில்லாமல் தெரிவித்து தேவையான உதவிகளைப் பெறும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

வடகிழக்குப் பருவமழையால் பாதிப்புகளை அகற்றிட உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள பெருநகர சென்னை மாநகராட்சியின் அலுவலர்கள், பொறியாளர்கள், பணியாளர்கள், தூய்மைப் பணியாளர்கள் உள்ளிட்ட 22 ஆயிரம் பேரும், சென்னை குடிநீர் வாரியம் 2,149 களப்பணியாளர்களும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். சென்னை மாநகரில் பொதுமக்களுக்கு 454 குடிநீர் வாகனங்கள் மூலம் 23.10.2025 அன்று 3181 நடைகள் வாயிலாக தடையில்லாமல் குடிநீர் வழங்குவதற்காக குடிநீர் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது," என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)



## முல்லைப் பெரியாறு அணை பாசன பகுதியில் விளைநிலங்கள் பாதிப்பு விவசாயிகளுக்கு நிதி உதவி வழங்குக: வைகோ கோரிக்கை!

அதிக கனமழையால் முல்லைப் பெரியாறு அணை பாசன பகுதியில் விளைநிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளதால் விவசாயிகளுக்கு நிதி உதவி வழங்க வேண்டும் என்று மதிமுக பொதுச்செயலாளர் வைகோ கோரிக்கை விடுத்துள்ளார். தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தேனி மாவட்டம், கம்பம் பள்ளத்தாக்கு பகுதியில் உள்ள முல்லைப் பெரியாறு பாசனப் பகுதியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு, வயல்வெளி மற்றும் தோட்டப்பகுதிகளுக்குள் நீர் புகுந்து பெரிதும் சேதத்தை ஏற்படுத்தி உள்ளது. தேனி மாவட்டத்தில் பருவமழை தீவிரம் அடைந்து, 32 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு அதிக கனமழை பெய்ததால், கம்பம் பள்ளத்தாக்கு பகுதிகளான சுருளிப்பட்டி, நாராயணதேவன்பட்டி, காமயகவுண்டன்பட்டி உள்ளிட்ட பல்வேறு கிராம பகுதிகளில் உள்ள மலைக் கிராம ஆறுகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. மேலும் தமிழக கேரள எல்லைப் பகுதியில் உள்ள மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதியிலும் அதிக கனமழை பெய்ததால், முல்லைப் பெரியாற்றில் இருந்து திறந்து விடப்படும் தண்ணீருடன், சிற்றோடைகளின் நீரும் கலந்து முல்லைப் பெரியாற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

கூடுதல் வெள்ளப்பெருக்கின் காரணமாக ஆற்றின் கரையோரப் பகுதியிலும், பாசனப் பகுதியில் உள்ள அறுவடைக்கு தயாரான நெற்பயிர்கள், காய்கறிகள் நீரில் மூழ்கி பாதிப்பு அடைந்திருக்கின்றன. வாழைத் தோட்டங்கள், தென்னந் தோப்புகள் நீரால் சூழப்பட்டுள்ளன. சின்ன வாய்க்கால்,உத்தமமுத்து வாய்க்கால், மற்றும் கம்பம், சின்னமனூர், உத்தமபாளையம், உப்புக்கோட்டை, பாலார்பட்டி கூழை யனூர் பகுதிகளில் கடந்த சில நாட்களாக பெய்து வரும் கனமழையால் வாய்க்கால்களில் உடைப்பு ஏற்பட்டு வெள்ள நீர் வயல்களில் புகுந்து, அறுவடைக்கு தயாராக இருந்த நெற் பயிர்கள் நீரில் மூழ்கி அழுகி இருக்கின்றன. இதனால் விவசாயிகள் வேதனை அடைந்துள்ளனர். எனவே, மழை மற்றும் முல்லைப் பெரியாற்று வெள்ள நீரால் சேதமடைந்துள்ள நெற் பயிர் மற்றும் தோட்டப் பயிர்களைக் கணக்கீடு செய்து தமிழ்நாடு அரசு இழப்பீட்டு நிதி உதவி வழங்கிட உடனடியாக ஏற்பாடுகள் செய்ய வேண்டும். உடைப்பு ஏற்பட்டு சேதமடைந்த வாய்க்கால் கரைகளை செப்பனிட்டு சீர்படுத்தவும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்துகிறேன். இவ்வாறு தெரிவித்துள்ளார். (ஐ)

## ரூ.4.05 கோடி மதிப்பிலான 45 புதிய வாகனங்களின் சேவைகளை தொடங்கி வைத்தார் மு.க. ஸ்டாலின்




ரூ.4.05 கோடி மதிப்பிலான 45 புதிய வாகனங்களை மாவட்ட சுகாதார அலுவலர்களின் பயன்பாட்டிற்காக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் கொடியசைத்து தொடங்கி வைத்தார். இது குறித்து வெளியிடப்பட்டுள்ள செய்தி குறிப்பில், முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் இன்று (24.10.2025) தலைமைச் செயலகத்தில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து இயக்ககத்தின் மாவட்ட சுகாதார அலுவலர்களின் பயன்பாட்டிற்காக 4 கோடியே 5 லட்சம் ரூபாய் மதிப்பிலான 45 புதிய வாகனங்களின் சேவைகளை கொடியசைத்து தொடங்கி வைத்தார். பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து இயக்ககம், தாய்-சேய் சுகாதார சேவைகள், தொற்று நோய்களைக் கட்டுப்படுத்துதல், தொற்று அல்லாத நோய் தடுப்பு நடவடிக்கைகள், சுகாதார நடவடிக்கைகள் போன்றவற்றின் மூலம் தமிழ்நாட்டு மக்களின் ஆரோக்கியத்தைப் பாதுகாத்து மேம்படுத்தும் பணியில் ஈடுபட்டு வருகிறது.

அரசின் திட்டங்களை செயல்படுத்துவதற்கு பொதுமக்களுக்கு தரமான மற்றும் பயனுள்ள பொது சுகாதார சேவைகளை வழங்குவதில் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து இயக்ககம் முக்கிய பங்கு வகிக்கிறது. மாவட்டங்களில் அனைத்து நோய் தடுப்பு மற்றும் சுகாதாரப் பராமரிப்பு நடவடிக்கைகளையும் பொருத்தமான திட்டமிடல், திறம்பட செயல்படுத்துதல் மற்றும் கண்காணித்தல் மூலம் மாவட்டங்களில் சுகாதார இலக்குகளை அடைவதில் மாவட்ட சுகாதார அலுவலர்கள் முக்கிய பொறுப்பு வகிக்கின்றனர். மாவட்ட சுகாதார அலுவலர்கள் நோய் கண்காணிப்பு பணிகள், ஆரம்ப சுகாதார நிலைய ஆய்வு, வட்டார அளவிலான ஆய்வு கூட்டம் மற்றும் இதர கள ஆய்வு போன்ற பணிகளை தினந்தோறும் மேற்கொண்டு வருகின்றனர். எனவே, மாவட்ட சுகாதார அலுவலர்களின் பயன்பாட்டிற்கு வாகனம் இன்றியமையாததாகும்.

இதனைக் கருத்தில் கொண்டு, பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து இயக்ககத்தின் மாவட்ட சுகாதார அலுவலர்களின் பயன்பாட்டிற்காக தமிழ்நாடு சுகாதார திட்ட நிதியின் கீழ் 4 கோடியே 5 லட்சம் ரூபாய் மதிப்பிலான 45 புதிய வாகனங்களின் சேவைகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்றைய தினம் கொடியசைத்து தொடங்கி வைத்தார்கள். இந்த நிகழ்ச்சியில், நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், இ.ஆ.ப., மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் ப. செந்தில்குமார், இ.ஆ.ப., தமிழ்நாடு சுகாதாரத் திட்டத்தின் திட்ட இயக்குநர் மரு.சு.வினீத், இ.ஆ.ப., பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து இயக்குநர் மரு. எ. சோமசுந்தரம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர். இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

(ஐ)



# இணையத்தின் விளைவுகள்

இணையம் என்பது உலக அளவில் பல கணினி வலையமைப்புகளின் கூட்டிணைப்பான பெரும் வலையமைப்பைக் குறிப்பதாகும். இந்த இணையம் மனிதர்களின் உற்றத் தோழனாக மாறிவிட்டதை யாராலும் மறுக்கவும், மறைக்கவும் முடியாது. இந்நவீன உலகில் பாலமாய் இருப்பது இணையமே ஆகும் என்றால் மிகையாகாது. அந்த இணையத்தின் ஆணிவேராக இயங்கும் பெரும்பாலான அடிப்படைத் தொழில்நுட்பங்களைப் புழங்குவது பற்றி இங்கு குறிப்பிட வேண்டும்.

மின்னஞ்சல் **(email)**, வலைத்தளங்கள் **(web pages)**, வலைப்பூக்கள் **(blogs)**, தேடுபொறிகள் **(search engines)**, வலைக்கூடங்கள் அல்லது சமூக வலைத்தளங்கள்; **(socical network such as Twitter> Facebook> LinkedIn)**, வலைத்திரைகள் **(video sharing services such as You-Tube)**, மின்னாட்சி **(e-governance)**, மின்வணிகம் **(e-Commerce)>** வலையூடகங்கள் **( web versions of electronic media)**, மின் தரவுத்தளங்கள் **(online encycopedia such as wikipedia)**, மின்கலைக்கூடங்கள் **(electronic art galleries)>** இணையக் கல்விக்கூடங்கள் **(web based learning> e-learning)** என்பவை இவற்றில் அடங்கும்.

ஆக கல்வி, தொழிற்துறை, விளையாட்டு, மருத்துவம், அறிவியல், பொருளாதரம், சமூகம் என அனைத்து துறைகளிலும் இந்த இணையத்தின் 'மாயமும் மகிமையும்' தேவைப்படுகிறது. இதற்கு முக்கிய சான்று நம் கல்வி அமைச்சால் அறிமுகப்படுத்திய **pembelajaran maya.** தற்போது, இனையத்தின் வழி மாணவர்கள் இல்லத்தில் இருந்தவாறே, பாடத்தை ஒட்டிக் கலந்துரையாடலோ, கருத்துப்பரிமாற்றமோ செய்யலாம். இவ்வாறு கற்க முயலும் மாணவர்கள் கல்வியில் புடமிட்ட வைரமாய் பிரகாசிப்பர் என்பது திண்ணமாகும்.

இதுமட்டுமின்றி, இணையத்தின் உதவியால் பல மருத்துவ சிகிச்சைகள் வெற்றிகரமாக நடந்து வருகின்றன. பல நாடுகளில் மருத்துவ வல்லூனர்கள் இந்த முறையை கையாளுகின்றனர். இதற்குச் சான்று அண்மையில் இங்கிலாந்து நாட்டில் இணையத்தின் வழி பிரசவம் நடைப்பெற்றதைக் குறிக்கலாம் மேலும்,



'இன்டெர்நெட்' எனப்படும் இணையத்தின் வரவு நம் அன்றாட வாழ்க்கையில் வியத்தகு மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. விரல் நுனியில் தகவல்கள், செய்திகள், புள்ளிவிவரங்கள் விரல் சொடுக்கும் நேரத்தில் தகவல், செய்திப் பரிமாற்றம், தரவிறக்கம்: பதிவேற்றம் பூமிக் கோளத்தில் நாடுகளின் எல்லைகள் மறைந்துபோய் 'எல்லையில்லா உலக' உருவாக்கம் தொலைவு என்பது மறைந்து போய், உள்ளங்கைக்குள் உலகம் சுருங்கிப்போன அதிசயம்! அதற்கு முக்கியச் சான்று எம்.எச் 17, ஏர் ஆசியா விமானம் கண்டுப்பிடிக்க இந்த இணையத்தின் பயன்பாட்டினை நீங்கள் அறிந்திருப்பீர்கள் என நம்புகிறேன்.

தொடர்ந்து, இணையத்தின் ஆதிக்கம் மக்களின் அன்றாட வாழ்விலும் மேலோங்கியே நிற்கின்றது. இன்றைய பரபரப்பான வாழ்வில் மக்கள் நேரத்தை சிக்கனப்படுத்துவதிலும், வேலைகளை எளிமையாக்விரைவாக முடிப்பதிலும் குறியாக இருக்கின்றனர். அந்த வகையில், கட்டணங்களை செலுத்துவது, பொருள்கள் வாங்குவது, வேலைக்கு மனு செய்வது, மற்றவருடன் தொடர்பு கொள்வது என அத்துனை வேலைகளையும் விரல் சொடுகும் நொடியில் முடித்து விடலாம். இந்த நேரத்தில் காலத்தேவனின் தேவை அதிகம் நமக்குத் தேவையில்லையே எனலாம். மேலும், அடையாள அட்டை, கடைப்பிதழ் அட்டை, வங்கி அட்டை என ஒவ்வொரு மனிதனின் முக்கிய பத்திரங்கள் மற்றும் அட்டைகள் செய்ய இணையம் மிக அவசியம்.

இப்படி பல நன்மைகளை வாரி வழங்கும் பாரி வள்ளரான இணையத்தினால் கெடுதல்களும் விளைகின்றன என்பதை ஒப்புக்கொள்ளதான் வேண்டும். இணையத்தின் மிகப் பெரும் சிக்கலே நம்பகத்தன்மை இன்மதான். சொல்வதைச் சரியாகப் பிழையில்லாமல் சொல்வது மட்டுமல்லாமல் தக்க

(7ஆம் பக்கம் பார்க்க...)



# தன்மானமுள்ள எந்நாடும் மற்றொரு நாட்டின் நெருக்குதலுக்கு அடிபணியாது:

## ரஷ்ய அதிபர் புதின் பேச்சு



தன்மானமுள்ள எந்நாடும் மற்றொரு நாட்டின் நெருக்குதலுக்கு அடிபணியாது என ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதின் தெரிவித்துள்ளார். கடந்த 2022ம் ஆண்டு முதல் உக்ரைன் மீது ரஷ்யா போர் புரிந்து வருகிறது. இத்தகைய போரை நிறுத்த அமெரிக்க அதிபர் டிரம்ப் முயன்று வருகிறார். ரஷ்யாவின் போரை சமாளிக்க உக்ரைனுக்கு அமெரிக்கா ஆயுதங்களையும் வழங்கி வருகிறது. அதே சமயம் போரை நிறுத்தவும் அதிபர் புதினுடன், டிரம்ப் பேசி வருகிறார். இருந்தும், உக்ரைன் போர் நிறுத்தத்திற்கு ரஷ்யா சம்மதிக்காததால், அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் அந்நாட்டின் இரு பெரிய கச்சா எண்ணெய் நிறுவனங்கள் மீது பொருளாதாரத் தடை விதித்துள்ளார்.

உலக கச்சா எண்ணெய் விநியோகத்தில் இந்த இரு நிறுவனங்களான ரோஸ்நெஃப்ட; (Rosneft) மற்றும் லுகோயில் (டுரமழடை) ஆகிய இரண்டு நிறுவனங்கள் மீது டிரம்ப் பொருளாதார தடை விதித்தார். ரஷ்ய அரசுக்கான மிகப்பெரிய வருவாய் ஆதாரமாக இந்நிறுவனங்கள் உள்ளன. அமெரிக்க அதிபரின் புதிய தடை பற்றி கருத்து தெரிவித்த புதின், தடைகளால் பெரிய பாதிப்பெல்லாம் ஏற்படாது. ரஷ்யாவுக்கு நெருக்கடி ஏற்படுத்த புதிய தடைகளை டிரம்ப் விதித்துள்ளார்.

தன்மானமுள்ள எந்நாடும் மற்றொரு நாட்டின் நெருக்குதலுக்கு அடிபணியாது. எனினும் சுயமரியாதை கொண்ட மக்கள் யாரும், நெருக்குதலுக்கு பணிந்து முடிவெடுக்க மாவட்டார்கள் என்றும் புதின் திட்டவட்டமாக தெரிவித்தார். (ஐ)

## வெனிசுலாவில் ஓடுபாதையில் வெடித்து சிதறிய சிறிய ரக விமானம்: 2 பேர் உயிரிழப்பு





வெனிசுலாவில் விமான நிலையத்திலிருந்து புறப்பட்ட சிறிய ரக விமானம் உடனே கட்டுப்பாட்டை இழந்து கீழே விழுந்து விபத்துக்குள்ளானதில் 2 பேர் உயிரிழந்தனர். வெனிசுலாவின் டாச்சிரா மாகாணம் பாராமில்லோ விமான நிலையத்தில் இருந்து சிறிய ரக விமானம் ஒன்று புறப்பட்டது. ஓடுதளத்தை விட்டு மேலே பறந்த சில நிமிடங்களிலேயே அந்த விமானம் விமானியின் கட்டுப்பாட்டை இழந்தது.

இதனால் ஓடுபாதையில் விழுந்த விமானம் தீப்பிடித்து எரிந்தது. இந்த விபத்தில் விமானி உள்பட 2 பேரும் கருகி பலியாகினர். இது தொடர்பான வீடியோ சமூகவலைதளங்களில் வெளியாகி பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. இதுகுறித்து விமான போக்குவரத்து துறை அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர். (ஐ)

## சீன கம்யூனிஸ்ட் தலைவராக அதிபர் ஜீ ஜின்பிங் நீடிப்பார்: கட்சியின் மத்தியக்குழு உறுதி



ஆளும் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக்குழு கூட்டம் கடந்த திங்களன்று தொடங்கியது. நான்கு நாட்கள் நடந்த இந்த கூட்டம் நேற்று நிறைவடைந்தது. இந்த கூட்டத்தில், அமெரிக்க அதிபர் டிரம்பின் வரிவிதிப்பு நடவடிக்கையால் ஏற்பட்டு வரும் தாக்கத்தையும், அதன் விளைவாக ஏற்படும் உலகளாவிய வர்த்தக பதற்றங்கள் குறித்தும் விவாதிக்கப்பட்டது.

இதன் மூலமாக சீனா பாதிக்கப்படாமல் தடுப்பதற்கு மிகவும் மீள்தன்மை கொண்ட உள்நாட்டு சந்தையை உருவாக்குவதற்கும் அதிக தன்னம்பிக்கையை அடைவதற்கும் ஒரு புதிய ஐந்து ஆண்டு திட்டத்துக்கு ஒப்புதல் வழங்கப்பட்டது. உயர் ராணுவ அதிகாரிகள் அளவிலான சீர்திருத்தத்துக்கும் கூட்டம் ஆதரவளித்துள்ளது. மேலும், சீன கம்யூனிஸ்ட் கட்சியின் மற்றும் சக்தி வாய்ந்த ராணுவத்தின் முக்கிய தலைமையாக அதிபர் ஜி ஜின்பிங்கை உறுப்பினர்கள் மீண்டும் உறுதிபடுத்தினார்கள். (ஐ)

## அமெரிக்கா விதித்துள்ள பொருளாதார தடை, போர் பிரகடனத்திற்கு சமம்: ரஷ்யா காட்டம்



அமெரிக்கா விதித்துள்ள பொருளாதார தடை, போர் பிரகடனத்திற்கு சமம் என ரஷ்யா தெரிவித்துள்ளது. ரஷ்யா-உக்ரைன் இடையே போர் நீடித்து வருகிறது. அந்த போரை முடிவுக்கு கொண்டு வர அமெரிக்க அதிபர் டிரம்ப் முயற்சி செய்து வருகிறார். ஆனால் உடன்பாடு எட்டியபாடில்லை. இந்நிலையில், ரஷ்யாவின் 2 பெரிய எண்ணெய் நிறுவனங்களான ரோஸ்நெப்ட், லுகோயில் மீது பொருளாதார தடை விதிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து அதிபர் டிரம்ப் கூறுகையில், ‘இந்த பொருளாதார தடை என்பது இவை மிகப்பெரியவை. ரஷ்யாவின் 2 மிகப்பெரிய எண்ணெய் நிறுவனங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கை நீண்ட நாட்கள் நீடிக்காது என்று நம்புகிறோம். போர் விரைவில் முடிவுக்கு வரும்’ என்றார்.

அமெரிக்க கருவூலத் துறையின் வெளிநாட்டு சொத்து கட்டுப்பாட்டு அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், ‘நிரந்தர அமைதி என்பது ரஷ்யாவை பொறுத்தது. இன்றைய நடவடிக்கைகள் ரஷ்யாவின் எரிசக்தி துறைகள் மீது அழுத்தத்தை அதிகரிக்கிறது. ரஷ்யாவின் பொருளாதாரத்தில் பலவீனத்தை ஏற்படுத்தும். அமெரிக்கா தொடர்ந்து ராஜதந்திர தீர்வை பின்பற்றுவதில் உறுதியாக உள்ளது. நிரந்தர அமைதி முற்றிலும் ரஷ்யாவின் நல்லெண்ண பேச்சுவார்த்தையை பொறுத்தது’ என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் இது தொடர்பாக, ரஷ்ய பாதுகாப்பு கவுன்சில் துணை தலைவர் டிமிட்ரி மெத்வதேவ் வெளியிட்டுள்ள அறிக்கையில் “ரஷ்யாவின் எண்ணெய் நிறுவனங்கள் மீது அமெரிக்கா விதித்துள்ள பொருளாதார தடை, போர் பிரகடனத்திற்கு சமம்.

ரஷ்யாவிற்கும், உக்ரைனுக்கும் இடையிலான மோதலுக்கான மூல காரணங்களைத் தீர்க்க வேண்டும். அமெரிக்க எங்கள் எதிர்போல் செயல்படுகிறது, அவர்களின் ‘அமைதி விரும்பி’ தற்போது ரஷ்யாவுக்கு எதிரான போர் பாதையில் செல்கிறார். அமெரிக்கா ஏமாற்றப்பட்ட ஐரோப்பாவுடன் தன்னை கூட்டாளியாக இணைத்துக் கொண்டுள்ளது. உக்ரைனில் போரை நிறுத்த, ரஷ்யாவை கட்டுப்படுத்த அமெரிக்கா விதித்துள்ள பொருளாதார தடைகள் எதிர்மறையானவை என்று குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## முழுக்க முழுக்க தங்கத்தில் தயாரான பைக்





இளைய தலைமுறையினரின் கனவுகளில் மிக முக்கியமானவைகளில் ஒன்று பைக் வாங்குவது. பல லட்சம் செலவழித்து தங்களுக்கு பிடித்த பைக்குகளை வாங்கி மகிழ்வார்கள். அதுவே பைக் தங்கத்தில் இருந்தால் அவற்றை வாங்குவதற்கு என தனிக்கூட்டம் முந்தும்தானே... அவ்வாறான ஒரு சம்பவம் துபாயில் நடந்துள்ளது. துபாயில் சர்வதேச வாகன கண்காட்சி நடந்தது.

இதில் சுசுகி நிறுவனம், தனது சூப்பர் பைக்கான ‘ஹயபூசா’வை காட்சிப்படுத்தியது. மணிக்கு 300 கி.மீட்டர் வேகத்தில் செல்லும் திறன் கொண்ட இந்த பைக்கை முழுக்க முழுக்க தங்கத்தில் வடிவமைத்திருந்தனர். இதன் விலை ரூ.1.67 கோடியாம். இதனை வாலிபர்கள் சுற்றி சுற்றி வலம் வருவது போன்ற வீடியோ இணையத்தில் வெளியாகி வைரலாகி வருகிறது. (ஐ)

## கொக்குவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நிகழ்வைக் கொக்குவில் படுகொலை நினைவேந்தல் குழு ஏற்பாடு செய்திருந்தது.

முதலில் பொதுச் சுடர் ஏற்றப்பட்டு அகவணக்கம் செலுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து உயிரிழந்தவர்களுக்கு மலர் அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

1987 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 21 ஆம் மற்றும் 22, 23,23ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் வைத்தியசாலை, கொக்குவில் பிரம்படி, கோண்டாவில், கொக்குவில் இந்துக் கல்லூரி வளாகம் ஆகிய இடங்களில் இந்திய இராணுவம் பொதுமக்களைப் டுகொலை செய்திருந்தது.

## பருத்தித்துறை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வர்த்தக சங்கத்தினருடன் ஓட்டோ உரிமையாளர் சங்கம் மற்றும் சில மரக்கறி வியாபாரிகள் ஒன்றிணைந்து பருத்தித்துறை நவீன சந்தைக் கட்டட வாசலில் இருந்து காலை 9 மணிக்கு ஆரம்பித்த கவனவீர்ப்புப் போராட்ட பேரணி நகரின் ஒருவழி பாதை துறைமுக வீதி வழியாக பருத்தித்துறை நகர சபை வாசலை அரைமணி நேரத்தில் சென்றடைந்தது.

சுமார் இருநூறு பேர் வரை மேற்கொண்ட இந்தப் பேரணி நகர சபை வாசலில் குழுமி நின்று மரக்கறி சந்தையை பழைய இடத்துக்கு மாற்றுமாறு கோரி பல்வேறு கோஷங்களை எழுப்பினர்.

தொடர்ந்து பருத்தித்துறை நகர சபை தவிசாளர் வின்சன்ட் போல் டக்ளஸ் போல், பருத்தித்துறை நகர சபை செயலாளர் திருமதி தாரணி கஜரூபன் ஆகியோரிடம் பருத்தித்துறை வர்த்தக சங்கப் பிரதிநிதிகள் சந்தையை மாற்றுமாறு கோரி மகஜர் ஒன்றைக் கையளித்தனர்.

போராட்டம் நடைபெற்ற இதேவேளை புதிய மரக்கறி சந்தை அதிகாலை முதல் வழமை போல் இயங்கியது.

இன்றைய சந்தை வியாபாரத்தின் போது ஒருசில மரக்கறி வியாபாரிகள் தவிர ஏனைய வியாபாரிகள் தமது வியாபாரத்தை மேற்கொண்டனர்.

## பருத்தித்துறை மரக்கறி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாடாளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன் அங்குள்ள நிலைமையை நேரில் பார்வையிட்டார்.

இதன்போது வியாபாரிகள் சிலர், நாடாளுமன்ற உறுப்பினருடன் தர்க்கத்தில் ஈடுபட்டிருந்தனர். சந்தைக்கு உரிய தீர்வில்லையேல் தீக்குளிப்போம் என வியாபாரி ஒருவர் சத்தமிட்டார்.

நிலைமைகளை அவதானித்த நாடாளுமன்ற உறுப்பினர், இது தொடர்பில் கலந்தாலோசித்து நல்ல முடிவு எட்டப்படும் என்று தெரிவித்தார்.

## என் உயிருக்கு,...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்த விவகாரம் குறித்து விசாரிக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர் ஜகத் விதான நாடாளுமன்றத்தையும், அரசையும் கேட்டுக்கொண்டார்.

அவரது முறையீட்டுக்குப் பதிலளித்த பிரதி சபாநாயகர், இந்த விடயம் சபாநாயகரின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்படும் என்றும், சபாநாயகரிடம் தனது கோரிக்கையை எழுத்துபூர்வமாக முன்வைக்குமாறும் நாடாளுமன்ற உறுப்பினர் ஜகத் விதானவிடம் தெரிவித்தார்.

## போதைப்பொருள் வர்த்தகத்தை நாட்டிலிருந்து முற்றாக ஒழிக்க அனைவரும் ஒன்றுபட வேண்டும்– ஜனாதிபதி வலியுறுத்து!

*போதைப்பொருள் வர்த்தகத்தை நாட்டிலிருந்து முற்றாக ஒழிக்க வேண்டிய தேசியப் பொறுப்பை நிறைவேற்ற அனைவரும் ஒன்றுபட வேண்டும் என ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க வலியுறுத்தியுள்ளார். ஜனாதிபதி அலுவலகத்தில் இன்று (23) பிற்பகல் நடைபெற்ற சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.*

*அவர் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,*

*எதிர்கால சந்ததியினரின் உயிருக்கு அச்சுறுத்தலாகவும், தேசிய பேரழிவாகவும் மாறியுள்ள போதைப்பொருள் வர்த்தகத்தை நாட்டிலிருந்து முற்றாக ஒழிக்க வேண்டிய தேசியத் தேவை உள்ளது. இந்த விடயத்தில் எவ்வித விவாதத்திற்கும் இடமில்லை. இந்த தேசியப் பொறுப்பை நிறைவேற்ற அனைவரும் ஒன்றுபட வேண்டும் இதுகுறித்து சமூகத்தில் பரவலான விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் எனவும், இதில் ஊடகங்களுக்கு முக்கிய பங்கு உள்ளதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.*

*மேலும் அனைத்து ஊடக நிறுவனத் தலைவர்களையும் இந்த முயற்சிக்கு பங்களிக்குமாறு அவர் அழைப்பு விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது*

# கெஹல்பத்தர பத்மேவின் கையடக்க தொலைபேசியில் கசிந்த பிரபல நடிகைகள் தொடர்பான தகவல்கள்!

*பாதாள உலக தலைவர் கெஹல்பத்தர பத்மேவின் கையடக்க தொலைபேசி தகவல்களை ஆராய்ந்ததில், பிரபல நடிகைகள் தொடர்பில் தகவல்கள் தெரியவந்துள்ளன.*

*அதன்படி குற்றப் புலனாய்வுத் துறை ஆறு பெண்கள் தொடர்பில் வாக்குமூலங்களைப் பதிவு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.*

*ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளியான கெஹல்பத்தர பத்மே சமீபத்தில் இந்தோனேசியாவில் கைது செய்யப்பட்டு நாட்டுக்கு அழைத்து வரப்பட்டு, குற்றப் புலனாய்வுத் துறையால் **(CID)** தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வரப்படுகின்றன.*

*இதன் போது அவரது கையடக்க தொலைபேசிகளும் சிஐடியினரால் கைப்பற்றப்பட்டு ஆய்வு செய்யப்பட்டன. இதில் பிரபல நடிகை ஒருவர் தனது காதலனுடன் இருக்கும் ஆபாச காணொளி தொலைபேசியில் கண்டுபிடிக்கப்பட்டதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.*

*அத்துடன் மற்ற ஐந்து நடிகைகளின் புகைப்படங்களும், 'மிஸ் இலங்கை' மாடலின் புகைப்படங்களும் அந்த கையடக்க தொலைபேசியில் காணப்பட்டன.*

*பெரும்பாலான புகைப்படங்கள் கெஹல்பத்தர பத்மேவுடன் வெளிநாடுகளில் எடுக்கப்பட்டவை என்று தெரிவிக்கப்படுகிறது.*

*இது குறித்து விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.*

*இதற்கிடையில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பொறுப்பில் உள்ள கெஹெல்பத்தர பத்மே, அந்த திணைக்களத்திலிருந்து வெளியே அழைத்துச் செல்லப்பட மாட்டார் என வழங்கப்பட்ட உறுதிமொழியை டிசம்பர் 2 ஆம் திகதி வரை நீட்டித்து மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது. தனது மகனின் பாதுகாப்பை உறுதிசெய்ய உத்தரவிடக் கோரி கெஹெல்பத்தர பத்மேவின் தாயார் தாக்கல் செய்த ரிட் மனு, மேன்முறையீட்டுப் நீதிமன்றின் தலைமை நீதியரசர் ரோஹந்த அபேசூரிய மற்றும் பிரியந்த பெர்னாண்டோ ஆகியோர் அடங்கிய நீதியரசர்கள் அமர்வு முன் நேற்று அழைக்கப்பட்டது.*

*மனுவின் சமர்ப்பணங்களை உறுதிப்படுத்த டிசம்பர் 2ஆம் திகதி மனுவை அழைக்குமாறு அமர்வு உத்தரவிட்டது.*

*அப்போது, மனுதாரர் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி அனுஜ பிரேமரத்ன, நீதிமன்றத்தின் முன் சமர்ப்பணங்களை முன்வைத்து, தற்போது தடுப்பு காவலில் வைக்கப்பட்டுள்ள கெஹெல்பத்தர பத்மேவை குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திலிருந்து வெளியே உள்ள இடங்களுக்கு அழைத்துச்செல்ல மாட்டோம் என பிரதிவாதிகள் நீதிமன்றத்தில் அளித்த முந்தைய உறுதிமொழியை அந்தத் திகதி வரை நீட்டிக்குமாறு கோரினார்.*

*இந்தக் கோரிக்கையை பிரதிவாதிகள் சார்பில் ஆஜரான பிரதி சொலிசிட்டர் ஜெனரல் ஏற்றுக்கொண்டார். அதன்படி அடுத்த நீதிமன்றத் திகதி வரை குறித்த உறுதிமொழியை நீட்டிக்க நீதியரசர்கள் அமர்வு உத்தரவிட்டது.*

*தனது மகன் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தால் கைது செய்யப்பட்டு தற்போது தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வருவதாக மனுதாரர் கூறுகிறார்.*

*தடுத்து வைக்கப்பட்டுள்ள தனது மகனின் உயிருக்கான பாதுகாப்பை உறுதி செய்து, குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு வெளியே உள்ள இடங்களுக்கு அழைத்துச் செல்வதைத் தடுக்கும் உத்தரவைப் பிறப்பிக்குமாறு கோரி மனுதாரர் நீதிமன்றத்தில் இந்த மனுவை தாக்கல் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.*

## அரசாங்க பல் வைத்தியர்கள் சங்கம் வேலைநிறுத்தப் போராட்டத்தை முன்னெடுக்க தீர்மானம்!

ஒருநாள் அடையாள வேலைநிறுத்தப் போராட்டத்தை முன்னெடுக்க தீர்மானித்துள்ளதாக அரசாங்க பல் வைத்தியர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அதன்படி நவம்பர் மாதம் 06ஆம் திகதி ஒருநாள் அடையாள வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சின் பல் வைத்திய சேவைகள் பணிப்பாளரின் தன்னிச்சையான நடவடிக்கைகள் காரணமாக பல பிரச்சினைகள் எழுந்துள்ள காரணத்தினால் இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் விதமாக இந்த அடையாள வேலைநிறுத்தம் மேற்கொள்ளப்படுவதாக அரசாங்க பல் வைத்தியர்கள் சங்கத்தின் தலைவர் நளின் தம்மிக்க தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# யாழில் குற்ற சம்பவங்களில் ஈடுபடுபவர்கள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பம்!

யாழ்ப்பாணத்தில் குற்ற சம்பவங்களில் ஈடுபடுபவர்கள் தொடர்பில் யாழ்ப்பாண குற்றத்தடுப்பு பிரிவினரால் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

முதல் கட்டமாக 08 பேருக்கு எதிராக விசாரணைகளை ஆரம்பித்துள்ள பொலிஸார், அவர்களில் ஐவருக்கு எதிராக யாழ்ப்பாண நீதவான் நீதிமன்றிலும், மூவருக்கு எதிராக மல்லாகம் நீதவான் நீதிமன்றிலும் வழக்குகள் தொடரப்படவுள்ளன.

வெளிநாடுகளில் இருந்து பெருந்தொகை பணத்தினை பெற்று யாழ்ப்பாணத்தில் வன்முறை சம்பவங்களில் ஈடுபடுதல், வட்டிக்கு பணத்தினை வழங்கி அதனை திரும்ப செலுத்த தவறுபவர்களை கடத்தி சென்று சித்திரவதைகளுக்கு உள்ளாக்கி, அவற்றை காணொளியாக பதிவு செய்து சமூக வலைத்தளங்களில் பதிவேற்றுதல், பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து போதை மாத்திரைகளை விற்பனை செய்தல், போதைப்பொருள் கடத்தல்களில் ஈடுபடுதல் உள்ளிட்ட பல்வேறு சட்ட விரோத செயற்பாடுகள் ஊடாக சொத்துக்களை சேர்ந்தவர்கள் தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவல்களின் அடிப்படையில் பொலிஸ் விசேட பிரிவொன்று விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

அதன்படி முதல் கட்டமாக யாழ்ப்பாணத்தில் எட்டு பேர் அடையாளம் காணப்பட்டு, அவர்களிடம் வாக்கு மூலங்களை பெற்றுக்கொள்ளும் நடவடிக்கைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

மேலும் யாழ்ப்பாணத்தில் சட்டவிரோதமான முறையில் சொத்து சேர்ப்பவர்கள் தொடர்பில் பல்வேறு முறைப்பாடுகள் தமக்கு கிடைக்க பெற்று வருவதாகவும், அது தொடர்பில் விரிவான விசாரணைகளை முன்னெடுப்போம் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இணையத்தின்........

சான்றுகளையும் காட்ட வேண்டும். இணையத்தில் கிடைக்கும் பெரும்பாலான செய்திகளை நாம் "கண்ணால் காண்பதும் பொய், காதால் கேட்பதும் பொய், தீர விசாரிப்பதே மெய்" என்ற பார்வையில்தான் அணுக வேண்டும். யார் வேண்டுமானாலும் எதைப் பற்றி வேண்டுமானாலும் என்ன வேண்டுமானாலும் எழுதுவதால் உண்மை எது, பொய் எது என்று புரியாமல் தடுமாறுகிறோம். அதனால், பல வகைகளில் தனி மனிதருக்கும் மற்றும் ஒரு நாட்டிற்கும் பிரச்சனைகள் வந்துக் கொண்டிருப்பதை கண்கூடாக காண முடிகிறது. இதற்கு தக்கச்சான்று, வாத்ஸஆப், முகப்புத்தகம் இன்னும் பல. தொடர்ந்து, இணையத்தில் வன்முறை சம்பவங்கள் அளவுக்கு அதிகமாக பெருகெடுத்து வருகின்றன.

மின்னியல் திருடர்கள், இணையம் மூலம் வங்கிக் கொள்ளை, நாட்டின் ரகசியங்களத் திருடுதல், இணையம் மூலம் வைரஸ் பரப்புதல் என தீய வழிகளிலும் தன் செல்வாக்கை வளர்த்துள்ளது இணையம். இதற்கு தக்க சான்று, நம் நாட்டின் வலையகம் இணைய ாயஉமநச முடக்கப்பட்டது.

அவையோரே, கத்தியின் கூர்மையை பழம் நறுக்கவும் பயன்படுத்தப்படுகிறத் ஒருவரை காயம் விளைவிக்கவும் பயன்படுத்தப்படுகிறது. ஆக இது கத்தியின் தவறு இல்லை, அதனைப் பயன்படுத்துவோரின் கையில் உள்ளது. ஆகவே கற்றறிந்த மானிடராகிய நாம் அன்னப் பறவையாய் உருமாறி இணையத்திலிருந்து நல்லதைப் பருகி அல்லதை ஒதுக்கி பயன் அடைவோம்







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 24.10.2025 வெளியிடப்பெற்றது.